பக்கங்கள் 14 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## எம்.பியாகின்றார் முஜிபுர் ரஹ்மான்

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வந்த டயனா கமகேவின் எம்.பி. பதவி உயர் நீதிமன்றத்தால் நீக்கப்பட்டதன் காரணமாக வெற்றிடமாகியுள்ள

04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 25 புதன்கிழமை 08.05.2024 அதிர்வு 282



### இரட்டைப் பிரஜாவுரிமை வழக்கில்

# எம்.பி. பதவியை இழந்தார் டயனா




இராஜாங்க அமைச்சர் டயனா கமகே நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கச் சட்ட ரீதியாக தகுதியற்றவர் என உயர் நீதிமன்றம் இன்று அதிரடித் தீர்ப்பு வழங்கியுள்ளது.

04

# ரஷ்யா - உக்ரைன் போரில் கூலிப்படையாகச் சேராதீர்

### இலங்கைப் படையினருக்கு சவேந்திர சில்வா எச்சரிக்கை

(ந.லோகதயாளன்)

வெளிநாடுகளில் கூலிப்படையாக இணைப்பதற்கு முன்னெடுக்கப்படும் போலிப் பிரசாரங்களில் இருந்து விலகியிருக்குமாறு இலங்கைப் படையினரிடம் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா கோரிக்கை விடுத்துள்ளார்.

அறிக்கை ஒன்றை விடுத்துள்ள

04








# மகாவலி அபிவிருத்தியின் பெயரால் தமிழரின் நிலங்களை அபகரிக்காதே!

## வடக்கு ஆளுநர் செயலகம் முன்பாகப் போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**

மகாவலி அபிவிருத்தி எனும் பெயரில் தமிழ்ப் பூர்வீகக் கிராமங்களில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்தக் கோரி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாக இன்று காலை 10 மணியளவில் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மகாவலி அபிவிருத்தி எனும் பெயரில் மேற்கொள்ளப்படும் நில ஆக்கிரமிப்பை நிறுத்தக் கோரியும், குறித்த பிரதேசத்தில் மக்களின் காணிகளை ஆக்கிரமிக்கும் தனியார் விடுதி ஒன்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரியும் இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்பினர் வடக்கு மாகாண ஆளுநருக்கான மகஜர் ஒன்றும் ஆளுநர் செயலகத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் கடற்றொழில் சங்கங்கள் சார்பில் கையளிக்கப்பட்டது.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன், பாதிக்கப்பட்ட மக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

















# மாதுளைப் பழம் பதப்படுத்தல் நிலையம் களுவாஞ்சிகுடியில்

(பழுவூரான்)

அரசால் முன்னெடுக்கப்பட்டு வரும் விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மாதுளைப் பயிற்செய்கை மிகவும் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் மாதுளைப் பயிற்செய்கைக்கு உரிய பதப்படுத்தும் நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு களுவாஞ்சிகுடி கடற்கரைப் வீதியில் திங்கட்கிழமை (06) இடம்பெற்றது.

விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்டத்தால் சுமார் 20 மில்லியன் செலவில் இந்த மாதுளைப் பதப்படுத்தல் நிலையம் அமையவுள்ளது.

இப்பிரதேசத்தில் 150 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு மாதுளைப் பயிர்ச்செய்கையில் விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்டத்தின் கீழ் மிகவும் சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றனர்.

களுவாஞ்சிகுடி அக்றி விலேஜ் அமைப்பின் தலைவர் சீ.மதிசிவம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், விவசாய நவீன மயமாக்கல் செயற்றிட்டத்தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் இ.ஞானச்செல்வம், மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச சபையின் செயலாளர் ச. அறிவழகன், விவசாய விஞ்ஞானி அருள்நந்தி, கட்டடங்கள் திணைக்களத்தின் பொறியியலாளர் சந்திரமோகன், அந்தப் பகுதி உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி நித்தியா ரூபன், மற்றும் விவசாயிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு தெரிவான மாணவர்களுக்குக் கௌரவம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மட்டத்தில் இந்த வருடம் நடைபெற்ற கணித ஒலிம்பியாட் வினாடி வினாப் போட்டியில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் 8 மாணவர்கள் தெரிவாகி சர்வதேச மட்டத்தில் வெளிநாடு செல்லும் மாணவர் குழாமில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதுவே முதல் தடவையாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து அதிக எண்ணிக்கையான மாணவர்கள் ஒரே பாடசாலையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாக காணப்படுகிறது.



மட்டக்களப்பு வலய மட்ட போட்டியில் 60 மாணவர்கள் பங்கு பற்றி மாவட்ட மட்ட போட்டிக்காக அந்த 60 மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

கிழக்கு மாகாணமட்ட போட்டிக்காக 24 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அதிலிருந்து 16 மாணவர்கள் தேசிய மட்ட போட்டிக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

# சு.கவுக்குள் பிளவுபட்டுள்ள அணிகள் ஒன்றிணைய வேண்டும்!

## தயாசிறி ஜயசேகர எம்.பி. கோரிக்கை



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவுபட்டுள்ள அணிகள் ஒன்றுபட வேண்டும் எனவும், சந்திரிகா அம்மையாரும் இணைய வேண்டும் எனவும் அக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரான தயாசிறி ஜயசேகர எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"எனக்கு ஜனாதிபதியாக வேண்டும் என்ற கனவு இல்லை. எனக்கான தகுதி என்ன என்பது எனக்குத் தெளிவாகத் தெரியும். கட்சியைக் கட்டியெழுப்புவதே எனது நோக்கம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது ராஜபக்ஷ குடும்பத்துக்கோ அல்லது பண்டாரநாயக்க குடும்பத்துக்கோ உரித்தானது அல்ல, அது மக்களின் கட்சி.

எனவே, பல அணிகளாகப் பிளவுபட்டுள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஒன்றுபட வேண்டும். அப்போதுதான் கட்சியை மீளக் கட்டியெழுப்ப முடியும்.

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கென நடைமுறையொன்று உள்ளது. அந்த விதிமுறைகளைக் கருத்தில்கொள்ளாமலேயே மைத்திரிபால சிறிசேன தன்னிச்சையாக ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்துள்ளார்." - என்றார்

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எம்.பியாகின்றார்...

அந்தப் பதவிக்கு முன்னாள் எம்.பி. முஜிபுர் ரஹ்மானின் பெயர் முன்மொழியப்பட்டுத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான முஜிபுர் ரஹ்மான், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர மேயர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக அந்தப் பதவியை இராஜினாநாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ரஷ்யா....

அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் - ரஷ்யப் போரில் இலங்கை இராணுவத்தின் முன்னாள் வீரர்கள் கூலிப் படைகளாக இணைந்து செயற்படுகின்றனர் என்று அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அத்துடன், இந்தப் போரில் இலங்கையர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக சம்பளம், குடியுரிமை, உள்ளிட்ட போலி வாக்குறுதிகளால் அழைத்துச் செல்லப்படும் இவர்கள் அங்கு கூலிப் படையாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே, சவேந்திர சில்வா இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"ஒரு காலத்தில் எம் தேசத்தின் பெருமையாக இருந்த இந்தப் படைவீரர்கள் இன்று போலியான வாக்குறுதிகளுக்கு அடிபணிந்துள்ளனர். போர் வீரர்கள் மற்றும் தேசபக்தர்கள் என்று வரையறுக்கும் விழுமியங்களையும் கைவிட்டுள்ளனர்.

இலங்கையின் ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் என்ற வகையில், கடமை, மரியாதை மற்றும் தாய்நாட்டுக்கான விசுவாச உணர்வு ஆகியவற்றால் நாங்கள் கட்டுப்பட்டுள்ளோம்.

ஆனால், இன்று பணம் மற்றும் நிலையற்ற பெருமைக்காக தங்களின் விசுவாசத்தை கைவிடும்படி தூண்டப்படுகின்றனர். கூலிப்படை என்பது உன்னதமாக போர் நடவடிக்கை அல்ல. மாறாக இது ஆபத்தான பாதையாகும்.

இந்தப் பாதையில் நடப்பவர்கள் மூலம் எமது மதிப்பிற்குரிய இராணுவத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் அபாயம் உள்ளது.

உலகின் மிகவும் பயங்கரவாத அமைப்பைத் தோற்கடித்த இராணுவத்தின் உறுப்பினர்களாக, நாம் எமது தொழிலின் மரியாதையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்த வேண்டும்." - என்று சவேந்திர சில்வா வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, ஓய்வுபெற்ற படையினருக்கு அதிக சம்பளம் மற்றும் சலுகைகள் வழங்குவதாகக் கூறி ரஷ்யா - உக்ரைன் போரில் முன்னணி சண்டைகளுக்கு அனுப்பும் மனிதக் கடத்தல் பற்றி தகவல் தெரிந்தால் கடற்படைத் தலைமையகத்துக்கு அறிவிக்குமாறு கடற்படையினர் பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கடற்படையினர் விடுத்துள்ள அறிவித்தலில்,

"இலங்கையின் முப்படைகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற படையினரை ரஷ்ய மற்றும் உக்ரேனியப் படைகளுடன் இணைக்கப்பட்டு, குடியுரிமை உள்ளிட்ட பெரும் சலுகைகளைப் பெற்றுத் தருவதாக கூறி சுற்றுலா வீசா மூலம் ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு ரஷ்யா - உக்ரைன் போரில் முன்னணி சண்டைகளுக்கு அனுப்பும் மனிதக் கடத்தல் பற்றி தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு சுற்றுலா வீசா மூலம் கொண்டு வரப்படும் ஓய்வுபெற்ற இராணுவத்தினர் ரஷ்யா மற்றும் உக்ரைனில் செயற்படும் கூலிப் படைகளுக்கு நியமிக்கப்படுகின்றனர். மேலும், அவர்களுக்கு அதிக சம்பளம் அல்லது சலுகைகள் வழங்கப்படுவதில்லை. கடுமையான குளிர், குறைந்த வசதிகள் மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் இல்லாத கடினமான மற்றும் கடுமையான நிலைமைகளை அவர்கள் எதிர்கொள்கின்றனர் என்று தெரிய வந்துள்ளது. அவர்களில் சிலர் போர் வலயத்தில் பலத்த காயம் அடைந்து அங்கு எந்தவித ஆதரவின்றி இறந்துள்ளனர் என்றும் தகவல்கள் தெரிய வந்துள்ளது.

தாய்நாட்டுக்குப் பல ஆண்டுகளாகப் பெருமை சேர்த்து பணியாற்றி ஓய்வுபெற்ற படை வீரராகச் சம்பாதித்த அனைத்துச் சலுகைகளையும், சொத்துக்களையும் இந்த மனிதக் கடத்தலில் சிக்கி இழக்காமல், கடைசியில் தனது சக ஊழியர்களோ, நெருங்கிய குடும்பத்தாரோ உதவியின்றி வெளிநாட்டு நிலத்தில் தங்கள் உயிரை இழக்கும் அபாயத்தைத் தவிர்க்குமாறு அனைத்து ஓய்வுபெற்ற கடற்படை வீரர்களிடமும் கடற்படை கேட்டுக்கொள்கின்றது.

இந்த மனிதக் கடத்தலில் ஈடுபடுகின்ற நபர்கள், செயலில் உள்ள இராணுவத்தினர் அல்லது அதற்கு ஆதரவளிக்கும் ஏனையவர்கள் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால் கடற்படைத் தலைமையக தொலைபேசி இலக்கமான 0117192142 அல்லது 0117192250 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு கடற்படை பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கின்றது." - என்றுள்ளது.

### எம்.பி....

டயனா கமகேவின் நாடாளுமன்ற உறுப்புரிமைக்கு எதிரான மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்ததை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையின் இறுதியில் உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி விசாரணையை நிறைவு செய்த நீதியரசர்கள் அமர்வு, அதன் தீர்ப்பைக் கால வரையறையின்றி ஒத்திவைத்தது. இந்நிலையில், இன்று தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமை தொடர்பான வழக்கிலேயே அவருக்கு இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

தான் தாக்கல் செய்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட இரண்டு வாரங்களின் பின்னர் சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் இந்த மேன்முறையீட்டு மனுவை முன்வைத்திருந்தார்.

டயனா கமகே மற்றும் பலரை தனது மேன்முறையீட்டின் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்ட ஓசல ஹேரத், இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றுள்ளதால் டயனா கமகே நாடாளுமன்ற உறுப்புரிமையை வகிக்கத் தகுதியற்றவர் எனத் தீர்ப்பளிக்குமாறு கோரியிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஊடாக நாடாளுமன்றம் வந்துவிட்டு, பின்னர் ஆளுங் கட்சிப் பக்கம் டயனா கமகே தாவினார். அவர் சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்து வந்தார்.

# புதிய காத்தான்குடியில் பள்ளிவாசல் உண்டியல் உடைக்கப்பட்டுத் திருட்டு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

காத்தான்குடி, புதிய காத்தான்குடியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றின் உண்டியல் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் திருடப்பட்டுள்ளது என்று பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

புதிய காத்தான்குடி அப்ரார் பள்ளிவாயலின் உண்டியலே கடந்த திங்கட்கிழமை பகலில் உடைத்துத் திருடப்பட்டுள்ளது.

பள்ளிவாசலுக்குள் வந்த ஒருவர் பள்ளிவாசலில் வைக்கப்பட்டிருந்த உண்டியலை உடைத்து திருடும் காட்சி பள்ளிவாயலின் சி.சி.டி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

இது தொடர்பாகப் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

# கல்முனை சுகாதார பணிமனையில் சேவை நலன் பாராட்டு நிகழ்வுகள்






(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் மிக நீண்ட காலமாக ஆயுள்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றி, மாகாண அலுவலகத்துக்குப் பதவி உயர்வு பெற்று செல்லும் டாக்டர் எம்.ஏ. நபீல் மற்றும் பிராந்திய பற் சிகிச்சை நிபுணராக கடமையாற்றி இடமாற்றம் பெற்று செல்லும் டாக்டர் எம்.ஏ.எம். சரூக் ஆகியோருக்கு பிரிவுத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களால் சேவை நலன் பாராட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் டாகடர் எம்.ஏ. நபீல் மற்றும் டாக்டர் எம்.ஏ.எம். சரூக் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# படைகளின் சீத்துவம்

இலங்கையின் முப்படைகளைச் சேர்ந்தோர், அவற்றிலிருந்து விலகியோர், ஓய்வு பெற்றோர், படை விட்டோடிகள் போன்றோர் ரஷ்யா - உக்ரைன் போரில் முன்னணிச் சண்டைகளுக்குக் கூலிப்படைகளாகச் செல்லுகின்றனர் என்று இப்பத்தியில் சில மாதங்களுக்கு முன்னர் சுட்டிக் காட்டியிருந்தோம்.

அப்போது அது குறித்து அதிகம் பிரதிபலிப்பைக் காட்டாது, அம்சடக்காக இருந்த இலங்கைப் பாதுகாப்புத் தரப்பு இப்போது விவகாரம் முழு அளவில் அம்பலமாகி வருகின்றமையை அடுத்து, காலம் தாழ்த்தித் துள்ளிக் குதிக்க - அல்லது கொதிக்க - தொடங்கியிருக்கின்றது.

வெளிநாடுகளில் கூலிப்படையாக இணைப்பதற்கு முன்னெடுக்கப்படும் பிரச்சாரங்களில் இருந்து விலகியிருக்குமாறு இலங்கைப் படை வீரர்களிடம் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவே பகிரங்க அறிக்கை மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதிக சம்பளம், குடியுரிமை உள்ளிட்ட போலி வாக்குறுதிகளால் அழைத்துச் செல்லப்படும் இவர்கள் அங்கு கூலிப் படையாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா ஒப்புக் கொள்கின்றார்.

"ஒரு காலத்தில் எம் தேசத்தின் பெருமையாக இருந்த இந்தப் படைவீரர்கள் இன்று போலியான வாக்குறுதிகளுக்கு அடிபணிந்துள்ளனர். போர் வீரர்கள் மற்றும் தேசபக்தர்கள் என்று வரையறுக்கும் விழுமியங்களையும் கைவிட்டுள்ளனர். இலங்கையின் ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் என்ற வகையில், கடமை, மரியாதை மற்றும் தாய்நாட்டிற்கான விசுவாச உணர்வு ஆகியவற்றால் நாங்கள் கட்டுப்பட்டுள்ளோம். ஆனால் இன்று பணம் மற்றும் நிலையற்ற பெருமைக்காக தங்களின் விசுவாசத்தை கைவிடும்படி தூண்டப்படுகின்றனர். கூலிப்படை என்பது உன்னதமாக போர் நடவடிக்கை அல்ல. மாறாக இது ஆபத்தான பாதையாகும். உலகின் மிகவும் பயங்கரவாத அமைப்பை தோற்கடித்த இராணுவத்தின் உறுப்பினர்களாக, நாம் எமது தொழிலின் மரியாதையையும் ஒருமைப்பாட்டையும் நிலைநிறுத்த வேண்டும்." - என ஜெனரல் சவேந்திர சில்வா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை இராணுவம் உட்பட்ட முப்படைகளின் பெருமை, மரியாதை குறித்துத் தம்பட்டம் அடிப்பது போல இப்போது பூசி மெழுகிப் பேசும் பாதுகாப்புப் படைகளின் பிரதானிக்கு தமது படைகள் தமிழருக்கு எதிரான போரில் எப்படிச் செயற்பட்டன என்பது தெரியாததல்ல.

யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவற்றில் அவரும் அவரின் படையினரும் ஈடுபட்டனர் என்று வெளிப்படையாகத் தெரிவித்து, அவை குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவாக விசாரணை நடத்தி, குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி, உண்மைகளை அம்பலப்படுத்தி, பொறுப்புக் கூறலை நிலைநாட்டி, இழப்பீடுகளை வழங்கி, மீள நிகழாமையை உறுதிப்படுத்த வேண்டும் என்று ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவே தீர்மானங்களுக்கு மேல் தீர்மானங்கள் இயற்றி வலியுறுத்தி, ஜெனரல் சவேந்திர சில்வாவின் படைகளின் சீத்துவத்தை உலக அரங்கில் அம்பலப்படுத்தி ஆண்டுகள் பலவாகி விட்டன.

இத்தகைய கொடூரங்களை ஜெனரல் சவேந்திர சில்வாவின் படைகள் கணக்கு வழக்கின்றி புரிந்தன என்பதை ஐ.நா. ஆணையாளர் நியமித்த தருஸ்மன் குழுவே தனது விசாரணை அறிக்கையின் மூலம் நிரூபித்து விட்டது.

இதற்குப் பின்னரும் தங்கள் படைகளின் மரியாதை பற்றி ஜெனரல் சவேந்திர சில்வா பீற்றுவது - தம்பட்டம் அடிப்பது - அர்த்தமற்றது.

விதைத்தது எதுவோ அதுதான் பயிராகும். தமிழர் தேசத்தை அழிப்பதற்கு சிங்களப் பேரினவாதக் கூலிப்படை ஒன்றையே அப்போது வளர்த்தீர்கள். நீங்கள் ஏவிய தரப்பு மீது அது பாய்ந்து பிறாண்டிய போது தேசத்தின் காவலர்கள் என்று அதற்கு நீங்கள் மகுடம் சூட்டினீர்கள். இப்போது பாதாள உலகக் குழுக்களாகவும், வெளிநாட்டுக் கூலிப் படையாகவும் அது தன் சுயரூபத்தைக் காட்டும் போது உங்களால் அதை சகிக்க முடியாதிருக்கின்றது. அவ்வளவே.

தமிழர்களை முள்ளிவாய்க்காலில் கொன்றொழித்த இந்த மே மாதத்திலேயே - தமிழர் தேசத்தைச் சின்னாபின்னமாக்கிய இந்த மாதத்திலேயே - உங்கள் படை பட்டாளம் குறித்துப் பகிரங்கத்தில் நீங்கள் நொந்துருகும் நிலைமை வந்திருப்பது வினைப்பயனே.




# நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் சர்வதேச மருத்துவ மாதுக்கள் தினம்

(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் மருத்துவ மாதுக்களின் ஏற்பாட்டில் திங்கட்கிழமை சர்வதேச மருத்துவ மாதுக்கள் தினம் கொண்டாடப்பட்டது.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம்.பி அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் டாக்டர் எம்.எஸ்.எம்.பாயிஸ், வைத்தியர்கள், தாதிய மேற்பார்வையாளர்கள், தாதியர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள், உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் பலரும் வாழ்த்துச் செய்திகளைப் பரிமாறிக் கொண்டனர்.





# தொழில் வாய்ப்பு உபகரணங்கள் திருகோணமலையில் வழங்கல்

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வருமானத்தை பெற்றுத் தரும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும் நோக்கோடு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கமானது 11 குடும்பங்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் தலா ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் குழாய்கள் மற்றும் தூவல் நீர்ப்பாசனக் கருவிகளை வழங்கியுள்ளது.

ஒரு மாத காலப் பகுதியில் மூன்றா வது முறையாக இன்று (08) இவற்றை வழங்கியது.

இவற்றை திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் திருகோணமலையில் வைத்து வழங்கி வைத்தார்.பெண் தலைமை தாங்கும் குடும்பங் களுக்கு இது அன்றாட ஜீவனோபாயத் துக்கான ஒரு ஊக்குவிப்பாகக் காணப்படுகிறது.





# மனித உரிமைகள் செயலமர்வு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கான மனித உரிமைகள் தொடர்பான செயலமர்வு திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இடம்பெற்றது.

வாழ்வுரிமை, மனித உரிமைகள் மையம், மனித உரிமைகள் முதலுதவி மையங்கள் ஆகியன இணைந்து இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்திருந்தன.

இந்தச் செயலமர்வின் போது மனித உரிமைகள் என்றால் என்ன? மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் எவை? மனித உரிமை மீறப்படும் போது எடுக்கப்பட வேண்டிய மாற்றுவழி என்ன? உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

செயலமர்வில் திருகோணமலை மாவட்டத்தில் மனித உரிமை செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் ஊடகவியலாளர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்பினர், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.





# மல்வத்தை மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் உதவி !

மல்வத்தை பிராந்திய உயர்தர கணித விஞ்ஞான மாணவர்களின் மேலதிக கற்றலுக்கான இரு வருட உதவியை ஆஸ்திரேலியா இணைந்த கரங்கள் அமைப்பு வழங்க முன்வந்துள்ளது.

“யுஅை வழ நஓஉ நடடநவெ ழரவ உழஅந” என்று இவ் வேலைத்திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவம் மல்வத்தை விபுலானந்த தேசிய பாடசாலையின் அதிபர் திருமதி கௌசல்யா கணேஸ்வரன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது .

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர் ஏ. காந்தன் கலந்து கொண்டார்.

கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் எம். எம். ஜெளபர், ஆசிரிய ஆலோசகர் ஹபீப் மற்றும் மேலதிக வகுப்பு ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

மல்வத்தை வீரமுனை பிராந்தியத்தில் கணித விஞ்ஞான பாடத்தைக் கற்கும் 12 மாணவர்களுக்கான இரு வருட பிரத்தியேகமான விசேட வகுப்புகள் நடத்த நிதிஉதவி அங்கு வழங்கப்பட்டது.



# காரைதீவு கடற்கரையோரங்களில் பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றுக!

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட கடற்கரையோரங்களில் அடைமழை காரணமாக பிளாஸ்டிக் மற்றும் இறந்த தாவரங்களின் கழிவுகள் அதிகளவாக தென்படுகின்றன.

அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் வடிந்தோடுவதற்காகத் தற்காலிகமான கால்வாய்கள் கடலை நோக்கி கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வெட்டப்பட்ட நிலையில் இவ்வாறான கழிவுகள் அதிகளவாகக் கடற்கரையில் கரை ஒதுங்கி நிறைந்து காணப்படுகின்றன.





அம்பாறை மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளான காரைதீவு மாளிகைக்காடு உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறான கழிவுகள் ஒதுங்கிக் காணப்படுகின்றன.

இவ்வாறான கழிவு பரவலானது கரையோர மீனவர்களது மீன்பிடித் தொழிலுக்கு பெரும் சிரமங்களை கொடுக்கிறது. வலைகளிலும் சிக்கியும் வருகின்றன. எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டும் என பாதிக்கப்பட்ட மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

# கல்முனை - மருதமுனை கடலரிப்பை கட்டுப்படுத்த கரையோர வளங்கள் திணைக்களம் நடவடிக்கை!

(நூருல் ஹுதா உமர்)

மாளிகைக்காடு– சாய்ந்தமருது பிரதேசங்களில் கடலரிப்பு தொடர்ந்து வரும் நிலையில் இப்போது கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை பிரதேசங்களிலும் கடலரிப்பு உக்கிரமாக இருக்கிறது.

இதனைக் கட்டுப்படுத்தி உடனடியாகத் தடுப்பணை அமைக்க வேண்டிய அவசியம் தொடர்பில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், ஜனாதிபதி செயலாளர் சமன் எக்கநாயக்கவை சந்தித்து விளக்கி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் தொடர்பில் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி செயலாளர் சமன் எக்கநாயக்கவை நேற்று (07) சந்தித்து கல்முனை, பாண்டிருப்பு, மருதமுனை பிரதேசங்களில் கடலரிப்பால் அந்தப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் சவால்கள், மீனவர்களின் பொருளாதார நஷ்டம், கடலோர பிரதேசங்களின் எதிர்கால ஆபத்து நிலைகளை விளக்கி கடலரிப்பால் ஏற்பட்ட பொருளாதார ரீதியான நஷ்டங்கள் தொடர்பிலும் விளக்கினார்.

அவசரமாகக் கடலரிப்பைக் கட்டுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், தடுப்பு அணைகளை அவசரமாக நிர்மாணிக்கத் தேவையான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

சகல விடயங்களையும் கேட்டறிந்த ஜனாதிபதி செயலாளர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை தொடர்பு கொண்டு குறித்த வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க அவசரமாக நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளார்.

தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய தான் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்து எழுத்து மூல பணிப்பையும் விடுத்துள்ளார். கடலரிப்பை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை அவசரமாக முன்னெடுக்க கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.



# கலைத்துளிர்கள் தின விழா

(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்திலுள்ள வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலய கலைத்துளிர்கள் தின விழா, அதன் அதிபர் கே. தியாகராஜா தலைமையில் நடைபெற்றது .

இதன்போது இவ்வருடம் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் ஊக்குவிக்கப்பட்டு வழி அனுப்பி வைக்கப்பட்டனர்.

அங்கு “கலைத்துளிர்கள்” என்ற சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. விழாவில் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.





# மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர்வள வளர்ப்பு திட்டங்கள்!

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்காலத்தில் அமுல்படுத் தப்படவுள்ள நீர்வள வளர்ப்புத் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடல் மேற்கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று (07) இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் உட்பட அரச அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.










# தொழுநோய் விழிப்புணர்வு செயலமர்வு சம்மாந்துறையில்

(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனைப் பிராந்தியத்தில் தொழு நோயால் பாதிக்கப்பட்டு இனங்காணப் பட்ட நோயாளர்களுக்கு முறையாக சிகிச்சையளிப்பதற்கும், வைத்திய சிகிச்சை வழங்கும் பொருட்டும் பிராந் திய தொற்று நோய் தடுப்பு பிரிவு பல் வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு அங்கமாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கள உத்தியோகத்தர்களுக்கான விழிப் புணர்வு செயலமர்வு இன்று (08) அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எல். பிர்தௌஸியாவின் ஒருங்கிணைப்பில் பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபாவின் தலைமையில் பிரதேச செய லக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம வள வாளராகக் கல்முனை பிராந்திய தொற்றுநோய் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.சீ.எம்.பசால் கலந்து கொண்டு தொழுநோய் சம்மந் தமான தெளிவான விளக்கம் வழங் கினார்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# ஒலுவிலில் பொதுக் கிணறுகள் நிர்மாணித்துக் கையளிப்பு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் அதிகரித்திருக்கின்ற நீர்க் கட்டணம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள ஒலுவில் பிரதேசத்திலுள்ள சில பகுதிகளைச் சேர்ந்த மக்களின் நலன் கருதி வை.டபிள்யூ.எம்.ஏ. பேரவையின் ஒருங்கிணைப்பில் கல்முனை ரஹ்மத் பவுண்டேசன் அமைப்பால் பொதுக் கிணறுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை (07) அமைப்பின் ஸ்தாபகரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் நடைபெற்றது.

குறித்த பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மிக நீண்ட காலமாக எதிர்நோக்கி வந்த நீர் பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று மிகக் குறுகிய காலத்தினுள் அதனை நிறைவேற்றித் தந்தமைக்காக ரஹ்மத் மன்சூருக்கு இதன்போது நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் அத்தியாவசியத் தேவைகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. இவை குறித்து காலக்கிரமத்தில் கூடிய கரிசனையுடன் கவனம் செலுத்தப்பட்டு, உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தேவையான முயற்சிகள் எடுக்கப்படும் என்று ரஹ்மத் மன்சூர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

# மணிவிழா நாயகனுக்குக் கௌரவிப்பு!



மணிவிழாக் காணும் யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரனை யாழ். நீரிழிவுக் கழகத்தினர் பாராட்டிக் கௌரவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட சுகாதார வேவைகள் பணிமனையில் இன்று (08) இந்த நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

யாழ். நீரிழிவுக் கழகப் போசகரும் யாழ். மருத்துவ பீடாதிபதியுமான பேராசிரியர் இ. சுரேந்திரகுமரன் கேதீஸ்வரனுக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார். தொடர்ந்து யாழ். நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவின் சிறப்பு வைத்திய நிபுணர் ம.அரவிந்தன், வைத்தியர் பரமேஸ்வரன், நீரிழிவுக் கழகத் தலைவர் தி. மைக்கல், மற்றும் அங்கத்தவர்கள் மலர்மாலை அணிவித்தனர்.

# இந்துக்களுக்கும், ராமருக்கும் எதிரானது 'இந்தியா' கூட்டணி

## உத்தர பிரதேச முதல்வர் மந்திரி யோகி ஆதித்யநாத் காட்டம்

லக்னோ,மே 08

காங்கிரஸ், சமாஜ்வாடி, தி.மு.க. உள்பட 'இந்தியா' கூட்டணியைச் சேர்ந்தவர்கள் அனைவரும் இந்து மதத்திற்கும், சனாதன தர்மத்திற்கும், கடவுள் ராமரின் கொள்கைகளுக்கும் எதிரானவர்கள் என உத்தர பிரதேச மாநில முதல் மந்திரி யோகி ஆதித்யநாத் தெரிவித்தார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு:–



"காங்கிரஸ் கட்சி, சமாஜ்வாடி கட்சி, ராஷ்டிரிய ஜனதாதளம் அல்லது தி.மு.க. என 'இந்தியா' கூட்டணியில் இருக்கும் அனைவரும் கடவுள் ராமரின் இருப்பையும், அவரது தெய்வீக சக்தியையும் கேள்வி எழுப்பக் கூடியவர்கள். அவர்கள் இந்தியாவின் நம்பிக்கைக்கும், தேசத்தின் நாயகர்களுக்கும் மதிப்பளிப்பார்கள் என்று நம்புவது வீணாகும்.

அவர்கள் இந்து மதத்திற்கும், சனாதன தர்மத்திற்கும் எதிரானவர்கள். பயங்கரவாதத்தை ஆதரித்து, கடவுள் ராமரின் கொள்கைக்கு எதிராக செயல்படக் கூடியவர்கள். காங்கிரஸ் மற்றும் 'இந்தியா' கூட்டணியைச் சேர்ந்தவர்கள் நீண்ட காலமாக அயோத்தி ராமர் கோவில் கட்டுமானத்திற்கு தடையாக இருந்து வந்தார்கள்.

ஆனால் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைந்த பிறகு ராமர் கோவில் கட்டி முடிக்கப்பட்டது. இன்று உலகம் முழுவதும் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் அயோத்தி ராமர் கோவிலுக்கு வருகை தருகிறார்கள். ஆனால் 'இந்தியா' கூட்டணியைச் சேர்ந்தவர்கள் எப்போதும் ராமரை எதிர்ப்போரைச் சார்ந்தவர்களாகவே இருக்கிறார்கள்."

– இவ்வாறு யோகி ஆதித்யநாத் தெரிவித்தார்.




# மோடியின் குத்தாட்டப் பதிவு அவரே அதற்கு முழு வரவேற்பு

புதுடெல்லி, மே 08

செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட தனது நடன வீடியோ பதிவுக்கு பிரதமர் மோடியே வரவேற்பு அளித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல் நாடு முழுவதும் பல்வேறு கட்டங்களில் வெற்றிகரமாக நடந்து வரும்நிலையில் அரசியல் தலைவர்களை கிண்டல் செய்யும்வகையில் வலைத்தளங்களில் மீம்கள், போட்டோக்கள், வீடியோக்கள் ஆகியவை வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன.

பல அரசியல் தலைவர்கள் இதற்கு எதிராக இருந்துவரும் நிலையில் பிரதமர் மோடி குறித்தான வீடியோவுக்கு அவரே வரவேற்பு தெரிவித்துள்ள நிகழ்வு வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

எக்ஸ் தளத்தில் ஏ.ஐ. தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பிரதமர் மோடி நடனமாடும் வகையில் வீடியோ ஒன்று பதிவிடப்பட்டுள்ளது. அந்த வீடியோவில் ஆரஞ்சு நிற மேல்சட்டை அணிந்துள்ள பிரதமர் மோடி வளைந்து நெளிந்து நடனம் ஆடியவாறு பிரமாண்ட மேடைக்கு வருகிறார். பின்னர் கோடிக்கணக்கான ரசிகர்கள் முன்னிலையில் துள்ளலான இசைக்கு குத்தாட்டம் போடுவதுபோல் உள்ளது.

மேலும் அதனோடு "இந்த பதிவுக்கு நான் கைது செய்யப்பட மாட்டேன் என நம்புகிறேன்" என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்த பதிவு வெளியானவுடனேயே காட்டுத்தீபோல பரவியது.

தற்போது இந்தப் பதிவுக்கு பிரதமர் மோடியே வரவேற்பு அளித்துள்ளார். தன்னுடைய அதிகாரப்பூர்வ எக்ஸ் தள கணக்கில் இருந்து அவர் அதற்கு கருத்தை பதிவு செய்துள்ளார். அதில் "உங்களைபோல நானும் இதனை வெகுவாக ரசித்தேன். உச்சக்கட்ட வாக்கெடுப்பு காலத்தில் இத்தகைய படைப்பாற்றல் மகிழ்ச்சி அளிக்கிறது!" என்று குறிப்பிட்டுள்ளார்.



# போதைப் பொருள் கடத்தல் கும்பலில் 26 பேரை இஸ்ரேல் பொலிஸார் கைது

டெல் அவிவ்,மே 08

இஸ்ரேலில் போதை பொருட்களைக் கடத்தி, விநியோகம் செய்பவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் கும்பலின் முக்கிய உறுப்பினர்கள் 26 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இஸ்ரேல் நாட்டின் தெற்கே செங்கடலையொட்டிய வடக்கு கரையோரத்தில் அமைந்த நகரம் இலாத். இந்த நகரில் போதை பொருள் கடத்தல் நடைபெறுகிறது என பொலிஸாருக்குத் தகவல் சென்றது. இதனை தொடர்ந்து நடந்த அதிரடி நடவடிக்கையின் தொடர்ச்சியாக, போதை பொருள் கடத்தல் கும்பல் தலைவர்கள் 26 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

இதுபற்றி இஸ்ரேல் பொலிஸார் கூறும்போது –

10 மாதங்களாக இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. இதன்படி, ஆபத்துக்குரிய போதை பொருள்களைக் கடத்தி, விநியோகம் செய்பவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் குற்றவாளிகளுடன் ஒருவராக எங்களுடைய ஆள்கள் செயல்பட்டனர்.

நகரத்தில் உள்ள பல இடங்களில் இதுபோன்ற பணியில் அவர்கள் ஈடுபட்டனர். இதில், கொக்கைன், கெட்டமைன் மற்றும் தோசா உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத போதை பொருள்கள் வெவ்வேறு அளவுகளில், வெவ்வேறு வகைகளில் ஏஜெண்டுகளால் வாங்கப்பட்டன.

இதற்கான சான்றுகள் சேகரிக்கப்பட்டு உள்ளன. நீண்டகால மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நடவடிக்கைகளால் அவர்கள் கைது செய்யப்பட்டு உள்ளனர். இந்த போராட்டம் தொடரும்.

– என்று இலாத் பகுதியின் மண்டல தளபதியான பொலிஸ் துணை அத்தியட்சகர் எலியாகு ஷ்மோல் கூறியுள்ளார். எனினும், கைது செய்யப்பட்டவர்கள் யாரென்ற விவரங்கள் எதுவும் வெளிவரவில்லை.

# கொரோனாத் தடுப்பூசிகளைத் திரும்பப்பெற அஸ்ட்ராஜெனகா நிறுவனம் திடீர்த் தீர்மானம்

வொஷிங்டன், மே08

உலகம் முழுவதும் கொரோனாத் தடுப்பூசியைத் திரும்பப்பெறுவதாக அஸ்ட்ராஜெனகா நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸைத் தடுக்கப் பல்வேறு நிறுவனங்கள் தடுப்பூசிகளை உருவாக்கின. அவற்றில் இங்கிலாந்தைச் சேர்ந்த அஸ்ட்ராஜெனகா நிறுவனத்தில் கொரோனா தடுப்பூசி நல்ல பலன் தந்தது. அஸ்ட்ராஜெனகா நிறுவனமும் ஒக்ஸ்போர்ட்டு பல்கலைக்கழகமும் இணைந்து உருவாக்கிய இந்த தடுப்பூசி உலகம் முழுவதும் விநியோகிக்கப்பட்டது. இந்தியாவில் கோவிஷீல்டு என்ற பெயரில் இந்த தடுப்பூசி விநியோகிக்கப்பட்டது. தற்போது உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பு முடிவுக்கு வந்துள்ளது.

இதனிடையே, கொரோனா தடுப்பூசிகளால் பக்க விளைவுகள் ஏற்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. குறிப்பாக, அஸ்ட்ராஜெனகா நிறுவனத்தின் கொரோனா தடுப்பூசி பக்க விளைவுகளை ஏற்படுத்துவதாக தகவல்கள் வெளியாகின.

அஸ்ட்ராஜெனகா நிறுவனத்தில் கொரோனாத் தடுப்பூசி உயிரிழப்பு மற்றும் பலருக்கு காயத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் இதற்காக அந்நிறுவனம் 100 மில்லியன் பவுண்டுகள் இழப்பீடு தரக்கோரியும் இங்கிலாந்து நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது.




இந்த வழக்கு விசாரணையின் போது கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களில் சிலருக்கு அரிதினும் அரிதாக ரத்த உறைதல், ரத்த தட்டுகள் குறைவு உள்ளிட்ட பக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளன என அஸ்ட்ராஜெனகா நிறுவனம் ஒப்புக்கொண்டுள்ளது. இது உலக அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனா தடுப்பூசியை திரும்பப்பெறுவதாக அஸ்ட்ராஜெனகா நிறுவனம் இன்று அறிவித்துள்ளது. கொரோனா வைரஸ் பாதிப்பு பெருமளவு குறைந்துவிட்டதாலும், சந்தையில் தேவைக்கு அதிகமாகவே பல்வேறு கொரோனா தடுப்பூசி உள்ளதாலும் எங்கள் நிறுவனத்தின் கொரோனாத் தடுப்பூசியை திரும்பப்பெறுவதாக அஸ்ட்ராஜெனகா தெரிவித்துள்ளது.

தடுப்பூசியால் பக்க விளைவுகள் ஏற்படும் என அஸ்ட்ராஜெனகா இங்கிலாந்து நீதிமன்றத்தில் தெரிவித்திருந்த நிலையில் தற்போது உலகம் முழுவதும் தங்கள் நிறுவனத்தின் தடுப்பூசியை திரும்பப் பெற முன்வந்துள்ளது. இந்த சம்பவம் உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பக்கங்கள் - 5

# கனடா முரசு

புதன்கிழமை 08/05/2024

## ஒட்டாவாவில் ஒரு குடியிருப்புப் பகுதியை ஆக்கிரமித்துள்ள எலிகளால் தொல்லை!

கனடாவின் ஒட்டாவாவின் எல் மிரட்ஜ் கார்டன் குடியிருப்பை சேர்ந்த மக்கள் எலித் தொல்லையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். C2 ▶



# பெற்றோர், பேரர்களை கனடாவுக்கு வரவழைக்க வாய்ப்பளிக்கும் விசா!

**கனடாவில் (கியூபெக் தவிர்ந்த பகுதிகளில்) வாழ்பவர்களின் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிகளுக்கோர் மகிழ்ச்சியான செய்தி. மே மாதம் 21ஆம் திகதி முதல், கனடா ஸூரிநச ஏளைய ஒன்றை இவர்களுக்காக வழங்க தயாராகிவருகிறது.**

**ஸ்பொன்ஸர் செய்தவர்களுக்கு...**

**2020 ஆம் ஆண்டில் தங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிகளை கனடாவுக்கு அழைத்துவருவதற்காக ஸ்பொன்ஸர் செய்ய விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்த 35,700 ஸ்பொன்ஸர்களுக்கு, கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு, அழைப்பிதழ்களை அனுப்புவதை நீடிக்க உள்ளது.**

ஆகவே, ஏற்கனவே 2020ஆம் ஆண்டு விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்தவர்கள், தங்களுக்கு வரும் மின்னஞ்சல்களை கவனித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

ஸ்பான்சர் செய்யாதவர்களுக்கு...

நீங்கள் உங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிகளை கனடாவுக்கு அழைத்துவருவதற்காக ஸ்பொன்ஸர் செய்ய விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கவில்லை என்றால், சூப்பர் விசாவைப் பயன்படுத்தி உங்கள் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டியை கனடாவுக்கு அழைத்துவர ஒரு வாய்ப்பு உள்ளது.

இந்த சூப்பர் விசா, கனடாவுக்கு வரும் உங்கள் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிகளை ஒரு நேரத்தில் 5 ஆண்டுகள் வரை கனடாவில் தங்கியிருக்க அனுமதிக்கிறது. மேலும், உங்கள் இருப்பை கனடாவில் இருக்கும்போது நீட்டிக்கவும் முடியும்.

**தகுதி வரம்பு**

சூப்பர் விசாவிற்குத் தகுதிபெற, அவர்களுக்கு ஸ்பொன்ஸர் செய்பவர் ஒரு கனேடிய குடிமகனாக, அல்லது, நிரந்தர குடியிருப்பு அனுமதி பெற்றவராக அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கை, இந்தியா போன்ற – கனடாவில் வசிப்பதற்கு தற்காலிக வதிவிட விசா பெற வேண்டிய நாட்டவராக – இருக்கவேண்டியது அவசியம். C2 ▶

# சென்னைத் தம்பதியரின் பெற்றோர், பிள்ளை பலியாக மற்றொரு இந்தியர்தான் காரணமாம்!



கனடாவில் சாலை விபத்தில் இந்தியர்கள் உட்பட மூன்று பேர் பலியான விடயத்தில் அதிரவைக்கும் புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

அந்த மூவரின் மரணத்துக்கும் மற்றொரு இந்தியர்தான் காரணம் என்பதுதான் அது.

கனடாவில், கடந்த மாதம் – அதாவது ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி – மதுபானக் கடை ஒன்றில் திருடினார் என்ற சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரை பொலிஸார் துரத்த, அவர் வான் ஒன்றில் தப்பியோட, அவரது வான் மற்றொரு கார் மீது மோதி C2 ▶




# ஒன்றாரியோ மாணவர்களின் மத்தியில் சட்டவிராத சூதாட்ட நடவடிக்கைகள்!

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் மாணவர்கள் மத்தியில் சட்டவிராத சூதாட்ட நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன எனக் குற்றம் சுமத்தி அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இளைஞர்களை இலக்கு வைத்து இணைய வழியில் சட்டவிரோத சூதாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஒன்றாரியோ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில் ஒன்றாரியோவின் ஒரில்லா நகரில் மாணவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இணைய வழியில் சூதாட்டத்தில் ஈடுபட்டு பணம் செலுத்த தவறிய மாணவர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் எனவும் வழிழிநவள என்ற இணைய தளத்தின் வழியாக இந்த மோசடிகள் இடம்பெற்று வருகின்றன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சென்னை...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில், காரில் பயணித்த, இந்தியாவின் தமிழ்நாட்டிலுள்ள சென்னையைச் சேர்ந்த மணிவண்ணன் ஸ்ரீனிவாசபிள்ளை (60), அவரது மனைவியான மஹாலக்ஷ்மி அனந்தகிருஷ்ணன் (55) மற்றும் தம்பதியரின் பேரப்பிள்ளையான மூன்று மாதக்குழந்தையும் பலியானார்கள்.

தம்பதியர், தங்கள் மகன் கோகுல் நாத் (33), மருமகள் அஷ்விதா ஜவஹர் (27) மற்றும் பேரனான மூன்று மாதக் குழந்தை ஆதித்யா விவான் ஆகியோரைப் பார்ப்பதற்காக கனடா வந்துள்ளார்கள்.

இந்த சம்பவத்தில், தற்போது மற்றொரு அதிரவைக்கும் தகவல் வெளியாகியுள்ளது. அது என்னவென்றால், திருடமுயன்று பொலிஸாரால் துரத்தப்பட்டு, தவறான திசையில் வாகனத்தைச் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய நபரும் ஒரு இந்தியர்தான்.

அவரது பெயர் ககன்தீப் சிங் (21). சர்வதேச மாணவராக கனடாவுக்கு வந்த சிங், ஏற்கனவே ஒரு திருட்டு வழக்கில் சிக்கி, பிணையில் வெளியில் வந்திருக்கிறார்.

அவர் மீது ஏற்கனவே மதுபானக் கடைகளில் திருடினார் என இரண்டு குற்றச்சாட்டுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இநத விபத்தில் தமது பிள்ளை மற்றும் பெற்றோர் என மூன்று பெறுமதி மிக்க உயிர்களை இழந்து தவிக்கும் கோகுல் நாத் மணிவண்ணன் மற்றும் அஸ்விதா ஜவாஹர் தம்பதியினர் உருக்கமான பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

வீடு முழுவதிலும் மூன்று மாத மகனின் நினைவுகள் பரவிக் கிடப்பதாகவும் வீட்டுக்குள் செல்லும் தைரியமில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறுகிய காலத்தில் விலைமதிப்பற்ற நினைவுகளை மகன் அதித்யா வியான் வழங்கிச் சென்றுள்ளான் என அவர்கள் உருக்கமாகப் பதிவிட்டுள்ளனர்.

மணிவண்ணனின் பெற்றோரான மணிவண்ணன் சிறினிவாசபிள்ளை மற்றும் மஹாலக்ஷ்மி அனந்தகிருஷ்ணன் ஆகியோர் சென்னையிலிருந்து கனடா வந்து சில தினங்களில் இந்த கோர விபத்தில் சிக்கி உயிரிழந்தனர்.

பேரப்பிள்ளையுடன் நேரத்தை செலவிட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இவர்கள் கனடா வந்தனர் என மணிவண்ணன் தெரிவிக்கின்றார்.

இந்த துயரமான தருணத்தில் தனிமையை விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பெற்றோர்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், அவர்கள் தேவையான ஆவணங்களை வழங்கவும் வேண்டும்.

### விண்ணப்ப செயல்முறை

ஸ்பொன்ஸர் செய்வோர், தங்களைப் பெற்றெடுத்த பெற்றோர் அல்லது தத்தெடுத்த பெற்றோருக்கு ஸ்பொன்ஸர் செய்யமுடியும். அத்துடன், நிர்ணயிக்கப்பட்ட அளவிலான பணம் தங்களிடம் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஸ்பொன்ஸர் செய்யப்படும் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டி முறையானவர்களுக்கு, செல்லுபடியாகும் மருத்துவக் காப்பீடு பெற்றிருக்க வேண்டும்.

## ஒட்டாவாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் எண்ணிக்கையிலான எலிகள் தங்களது குடியிருப்பை ஆக்கிரமித்துள்ளன என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.



எலிகளை கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே எலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு நகராட்சியின் உதவியை இந்த மக்கள் நாடியுள்ளனர்.

கடந்த இருபத்து ஐந்து ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு எலிகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

எலிகளினால் ஆயிரக் கணக்கான டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டுள்ளன அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பெறுமதியான பொருள்களை எலிகள் சேதப்படுத்த விடுவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.




# நட்டத்தில் ‘கனடா போஸ்ட்’!

கனேடிய தபால் திணைக்களத்தின் நிதி நிலைமைகள் மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி இதுவரையில் தபால் திணைக்களம் அடைந்துள்ள மொத்த நட்டம் மூன்று பில்லியன் டொலர்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஓராண்டு காலப் பகுதிக்குள் நிதிப் பற்றாக்குறை நிலைமை ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.




கனேடிய தபால் திணைக்களம் கடந்த 2023 ஆம் ஆண்டில் 748 மில்லியன் டொலர் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

ஏற்பட்டுள்ள நட்டத்தை முத்திரைகளின் கட்டணங்களை அதிகரிப்பதன் மூலம் ஈடு செய்ய முடியாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் கனேடிய தபால் திணைக்களம் தொடர்ச்சியாக நட்டமடைந்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தபால் விநியோக எண்ணிக்கைகளும் குறைவடைந்து செல்லும் போக்கைப் பதிவு செய்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# குப்பை லொறி கவிழ்ந்தது

கெலோனாவில் பகுதியில் குப்பைக் கழிவுகள் கொட்டப்படும் இடத்துக்கு அருகில் ஜான் ஹிண்டில் டிரைவ் வழியில் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் குப்பை லாரி ஒன்று வீதியில் கவிழ்ந்தது.

டிரக்கின் பாரம் மாறியதால், வாகனம் அதன் பக்கவாட்டில் கவிழ்ந்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

வாகனத்தில் அச்சமயம் சாரதி மட்டுமே இருந்தார். சிறிய காயங்களுக்கு உள்ளான அவர், பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சாலை மூடப்படவில்லை. இருப்பினும் வாகன ஓட்டிகள் இப்பகுதியை எச்சரிக்கையாகக் கடக்கும்படி வேண்டப்பட்டனர்.




# பதின்ம வயதினர் இருவர் உட்பட மூவர் பிரெட்ரிக்டன் விபத்தில் உயிரிழந்தனர்

கனடாவின் நியூ பிரவுன்ஸ்விக் பிராந்தியத்தின் தலைநகரான பிரெட்ரிக்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

வேகமாக பயணித்த கார் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மரத்தில் மோதுண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனத்தின் சாரதியும் இரண்டு பயணிகளும் விபத்தில் ஏற்பட்ட காயங்கள் காரணமாக சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

22 வயதுடைய ஒரு நபரும், 14 வயதுப் பெண் ஒருவரும், 17 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்விபத்தில் கொல்லப்பட்டுள்ளனர். படுகாயமடைந்த 15 வயது ஆண் ஒருவர் ஹெலிக்கொப்டர் மூலம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு விரையப்பட்டார்.

மரத்தில் மோதுண்ட வாகனம் மற்றுமொரு வாகனத்திலும் மோதுண்டதாகவும் அந்த வாகனத்தில் பயணித்தவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.








# டொராண்டோவில் சிக்கியரின் பேரணி கனடாவிடம் இந்தியா கடும் ஆட்சேபம்

கனடா டொராண்டோவிலுள்ள மால்டனில் நடந்த நகர் கீர்த்தன் அணிவகுப்பில் காலிஸ்தான் சார்பு படங்கள் காட்சிப்படுத்தப்பட்டமையை அடுத்து, தீவிரவாதிகளுக்கு இடம் கொடுத்தமைக்காக கனடாவை இந்தியா மீண்டும் சாடியுள்ளது.

இதுகுறித்து வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள அறிக்கையில் “எங்கள் அரசியல் தலைமைக்கு எதிராக கனடாவில் உள்ள தீவிரவாதிகள் வன்முறைப் படங்களைப் பயன்படுத்துமின்றமையைப் பற்றி நாங்கள் பல முறை கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளோம். பேரணியில் இந்திய தூதரக அதிகாரிகளின் சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டு, அவர்களுக்கு எதிராக வன்முறை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது”.

“வன்முறையைக் கொண்டாடுவதும் மகிமைப்படுத்துவதும் எந்தவொரு நாகரீக சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்கக் கூடாது. சட்டத்தின் ஆட்சியை மதிக்கும் ஜனநாயக நாடுகள் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தலை அனுமதிக்கக்கூடாது” என்று அவர் மேலும் கூறினார்.

நகர் கீர்த்தனை அணிவகுப்பு ஒண்டாரியோ குருத்வாரா கமிட்டியால் ஏற்பாடு செய்யப்பட்டது.

அங்கு வைக்கப்பட்ட மிதவைகள் மற்றும் பேச்சுக்கள், இந்திய அரசியல் பிரமுகர்களை ஆக்ரோஷமாக குறிவைத்தும், சிறை கம்பிகளுக்குப் பின்னால் பிரதமர் நரேந்திர மோடி இருப்பது போலவும் சித்தரிக்கப்பட்டிருந்தது.

“கனடாவில் உள்ள எங்கள் இராஜதந்திர பிரதிநிதிகளின் பாதுகாப்பு குறித்து நாங்கள் தொடர்ந்து அக்கறை கொண்டுள்ளோம். மேலும் அவர்கள் தங்கள் பொறுப்புகளை அச்சமின்றி நிறைவேற்றுவதை கனடா அரசாங்கம் உறுதி செய்யும் என்று எதிர்பார்க்கிறோம்” என்று ஜெய்ஸ்வால் கூறினார்.

“குற்றவியல் மற்றும் பிரிவினைவாத கூறுகளுக்கு கனடாவில் பாதுகாப்பான புகலிடத்தையும் அரசியல் இடத்தையும் வழங்குவதை நிறுத்துமாறு கனடா அரசாங்கத்தை நாங்கள் மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்” என்று அவர் மேலும் கூறினார்.

# கனடாவில் உடல் எடையை குறைக்கும் மருந்து வகை பயன்பாட்டிற்கு அனுமதி



கனடாவில் உடல் எடையை குறைக்கும் மருந்து வகை பயன்பாட்டிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை கனடா உடற்பருமன் அதிகரிப்பு சிகிச்சைப் பிரிவின் மருத்துவர் சஞ்சீவ் சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

வெகோவி (Wegovy) என்ற உடல் எடை குறைப்பு மருந்து கடந்த திங்கட்கிழமை முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கியமாக மித மிஞ்சிய அளவில் எடை கூடியவர்களின் எடையைக் குறைப்பதற்கு இந்த மருந்து பயன்படுத்தப்பட உள்ளது.

மேலும் இரத்த அழுத்தம், நீரிழிவு, தூக்கமின்மை போன்ற நோய் நிலைமைகளை எதிர்நோக்கும் - உடல் எடை கூடியவர்கள் - இதைப் பயன்படுத்த முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், உடலை அழகுபடுத்தும் நோக்கிற்காக இந்த மருந்து பயன்படுத்தப்படாது என மருத்துவர் சஞ்சீவ் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வெகோவி (Wegovy) மருந்து உண்மையான மருத்துவ காரணங்களுக்காக மட்டும் பயன்படுத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக நீடித்த பற்றாக் குறைக்குப் பிறகு, கனடியர்கள் இப்போது வெகோவியை(ுநபழஎல) மருந்தினை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கபட்டுள்ளது , இது Ozempic இன் அதே உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்பட்ட எடை இழப்பு மருந்து என்பதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

Novo Nordisk இன் மருந்து திங்களன்று அதிகாரப்பூர்வமாக விற்பனைக்கு வந்துள்ளது. Wegovy இன் வருகையானது உடல் பருமன் மற்றும் நீரிழிவு நோயுடன் போராடுபவர்களுக்கு நல்ல தீர்வாக அமையும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது

“இது மருத்துவ நிலை, உடல் பருமன் உள்ளவர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஆய்வு செய்யப்பட்ட மருத்துவ சிகிச்சையாகும்” என டாக்டர் சஞ்சீவ் சொக்கலிங்கம் தெரிவித்தார்.

“ஆரோக்கியத்தை மேம்படுத்த உடல் எடையைக் குறைப்பதுடன், முந்தைய




வரலாற்றைக் கொண்டவர்களிடமும் ஐறுநபழஎலஸ இருதய நிகழ்வுகளை மேம்படுத்துகிறது மற்றும் குறைக்கிறது என்பதற்கான ஆதாரங்களும் எங்களிடம் உள்ளன.”எனவும் அவர் தெரிவித்தார்

கனடாவில், கடந்த மூன்று தசாப்தங்களாக உடல் பருமனின் பாதிப்பு மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இப்போது நான்கு பெரியவர்களில் ஒருவரை அது பாதிக்கிறது என்று ‘உடல் பருமன் கனடா’ அமைப்பு தெரிவித்துள்ளது.

உடல் பருமன் ஒரு நபரின் வாழ்க்கைத் தரம் மற்றும் ஆயுட்காலம் ஆகியவற்றைக் குறைப்பது மட்டுமல்லாமல், இதய நோய், புற்றுநோய், பக்கவாதம், நீரிழிவு மற்றும் அல்கஹால் அல்லாத கொழுப்பு கல்லீரல் நோய் போன்ற கடுமையான நாள்பட்ட நோய்களின் அபாயத்தையும் அதிகரிக்கிறது என வைத்தியர் சொக்கலிங்கம் கூறினார்.